குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், சீர்காழி, மயிலாடுதுறை மாவட்டம்.
முன்னிலை: திரு.R.கைலாஷ், B.A., B.L.,
நீதித்துறை நடுவர், சீர்காழி.

2026 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 27 ஆம் நாள் வெள்ளிக்கிழமை

ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.313/2024
CNR.NO.TNMY08-004219-2024

| | |
|---|---|
| குற்றமுறையீட்டாளர் : | அரசுக்காக,<br>காவல் உதவி ஆய்வாளர்,<br>திருவெண்காடு காவல் நிலையம்,<br>மயிலாடுதுறை மாவட்டம்,<br>குற்ற எண். 91/2023 |
| /எதிராக/ | |
| குற்றம்சாட்டப்பட்டவர்: | 1. அனிஸ்பாபு, 24/2023, த/பெ. ராஜேந்திரன்<br>2. நவீன் சந்திரவர்மன், 28/2023, த/பெ. பன்னீர்செல்வம்<br>3. அன்புசெல்வம், 30/2023, த/பெ. தங்கராசு<br>மேற்கண்ட மூவரும் இளையமதுகூடம், ராதாநல்லூர், சீர்காழி தாலுகா |
| குற்றச்சாட்டு | இந்திய தண்டனை சட்ட பிரிவுகள் 294(b), 326, 506(ii) |
| குற்றம் நிகழ்ந்த நாள் | 05.05.2023 |
| தகவல் தெரிவிக்கப்பட்ட நாள் | 07.05.2023 |
| எதிரி கைது செய்யப்பட்ட நாள் | 1,2 எதிரிகள் 07.05.2023 |
| எதிரி பிணையில் விடுவிக்கப்பட்ட நாள் | 1,2 எதிரிகள் 11.05.2023<br>3ம் எதிரி மாண்புமிகு மாவட்ட அமர்வு நீதிமன்றம், மயிலாடுதுறையின் Crlmp.No.1000/2023 20.06.2023 தேதியிட்ட உத்தரவுப்படி முன் பிணை பெற்று, 27.06.2023ல் இந்நீதிமன்றத்தில் சரணடைந்துள்ளார். |
| கு.வி.மு.ச.பிரிவு 240-ன் கீழ் குற்றச்சாட்டு குறித்து எதிரியிடம் கேட்கப்பட்ட நாள் | 29.09.2025 |
| விசாரணை தொடங்கிய நாள் | 01.12.2025 |
| விசாரணை முடிவடைந்த நாள் | 27.03.2026 |
| BNSS 359-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்ட மனுக்களின் விபரம் | -- |
| முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை செய்யப்பட்ட தேதிகள் | \| \| முதல் விசாரணை \| குறுக்கு விசாரணை \| |



KAILAASH R
Digitally signed by KAILAASH R
Date: 2026.03.27 21:19:44 +0530

| | | |
|---|---|---|
| அரசு தரப்பு சாட்சி.1 | 01.12.2025 | 01.12.2025 |
| அரசு தரப்பு சாட்சி.2 | 16.03.2026 | 16.03.2026 |
| அரசு தரப்பு சாட்சி.3 | 16.03.2026 | 16.03.2026 |
| அரசு தரப்பு சாட்சி.4 | 23.03.2026 | 23.03.2026 |

| | |
|---|---|
| கு.வி.மு.ச.பிரிவு 313(1)(b)–ன் கீழ் எதிரியிடம் கேள்வி கேட்கப்பட்ட நாள் | 26.03.2026 |
| தலைமறைவு எதிரி குறித்த விபரம் | இல்லை |
| நீதிமன்ற வழக்கு விசாரணைக்கு விதிக்கப்பட்ட தடை குறித்த விபரம் | இல்லை |
| வழக்கு விசாரணையில் ஏற்பட்ட தாமதத்திற்கான காரணம் | போலிசார் எதிரிகளுக்கு அழைப்பாணை சார்வு செய்வதில் தாமதம் ஏற்பட்டது. |
| தீர்மானம் | எதிரிகள் இந்திய தண்டனை சட்டம் பிரிவுகள் 294(b), 326, 506(ii) ன் கீழ் குற்றவாளிகள் இல்லை என தீர்மானம் |
| முடிவு | முடிவில் அரசு தரப்பில், முன்னிலைப்படுத்தப்பட்ட சாட்சிகளின் வாயிலாக 1ம் எதிரி மீது இந்திய தண்டனை சட்டம் பிரிவுகள் 294(b), 326, 506(ii)ன் கீழும், 2, 3 எதிரிகள் மீது இந்திய தண்டனை சட்டம் பிரிவுகள் 294(b), 326ன் கீழும் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்படவில்லை என முடிவு செய்து எதிரிகளை மேற்கண்ட பிரிவுகளின் கீழ் குற்றவாளிகள் இல்லை என குற்ற விசாரணை முறை சட்டம் 248(1) பிரிவின் படி எதிரியை விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது. |

இவ்வழக்கு இந்நீதிமன்றத்தால் கடந்த 30.12.2024 தேதியன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு, என் முன்பாக இறுதியாக 27.03.2026 ஆம் தேதி விசாரணைக்கு வந்தபோது, குற்ற முறையீட்டாளர் தரப்பில் உதவி அரசு குற்றவியல் வழக்கறிஞர் நிலை–II திருமதி. K. நிவேதா அவர்கள் முன்னிலையாகியும், எதிரிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. M. சிவபிரகாஷ் அவர்கள் முன்னிலையாகியும் இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டு வழக்காவணங்கள் பரிசீலிக்கப்பட்டும், இதுநாள் வரையில் இந்நீதிமன்றத்தில் பரிசீலனையில் இருந்து வந்து இன்று நீதிமன்றம் வழங்கிடும்.

<u>**தீர்ப்புரை**</u>

1. இவ்வழக்கானது கடந்த 05.05.2023ம் தேதி மாலை 19.45 மணியளவில் இளையமதுகூடத்தில் அமைந்துள்ள காளியம்மன்கோவிலின் திருவிழாவின் ஒரு அங்கமாக



KAILAASH R Digitally signed by KAILAASH R Date: 2026.03.27 21:19:52 +0530

காவடி கரகம் ஊர்வலம் சாலையில் சென்று கொண்டிருக்கும் போது, அந்த ஊர்வலத்தில் புகார்தாரரும் சாட்சி–1ம் ஆன பிரவீன்குமார் என்பவரும் நடந்து சென்ற போது, அப்பகுதியில் 1ம் எதிரி வேண்டுமென்றே தனது இருசக்கர வாகனத்தில் அதிவேகமாக வந்ததை தட்டிக்கேட்ட சாட்சி–1ஐ பார்த்து 1ம் எதிரி 'இது எங்க ஊர் நான் அப்படி தான் வருவேன் சாமியை ஓரமாக நிற்க சொல் குச்சிக்காரி மவனே தேவுடியா மவனே' என்று காமகுரோதமான வார்த்தைகளால் திட்டி, கீழே கிடந்த கட்டையை எடுத்து சாட்சி–1ன் இடது கை மணிகட்டு மற்றும் இடது முன்னங்கையில் தாக்கி கொடுங்காயத்தை ஏற்படுத்தி, 1ம் எதிரிக்கு ஆதரவாக அங்கு வந்த 2,3 எதிரிகள் புகார்தாரரை காமக்குரோதமாக திட்டி, 2ம் எதிரி பிளாஸ்டிக் பைப்பாலும், 1ம் எதிரி கையாலும் காலாலும் புகார்தாரரை மாறி மாறி அடித்து அவருக்கு கொடுங்காயத்தை ஏற்படுத்தி, 1ம் எதிரி தன் கையில் வைத்திருந்த கட்டையை அவரிடம் காட்டி 'இனிமேல் என்கிட்ட வச்சிகிட்டா உன்னை கொல்லாமல் விடமாட்டேன்' என்று மிரட்டியது சம்பந்தமாக, மேற்படி 1ம் எதிரியின் செயல் இந்திய தண்டனை சட்டம் பிரிவுகள் 294(b), 326, 506(ii) இதசவின் கீழும், 2, 3 எதிரிகள் செயல் இந்திய தண்டனை சட்டம் பிரிவுகள் 294(b), 326ன் கீழும் தண்டிக்கத்தக்கது என்று கருதி திருவெண்காடு காவல் நிலைய காவல் உதவி ஆய்வாளர் அவர்கள் குற்ற விசாரணை முறை சட்டம் பிரிவு 173(2)ன் கீழ் தாக்கல் செய்த குற்ற இறுதி அறிக்கையின் அடிப்படையில் எழுந்த வழக்கு ஆகும்.

2. மேற்படி குற்ற இறுதி அறிக்கையில் எதிரிகளுக்கு எதிராக முதல் தோற்ற வழக்கு எழுந்ததால் வழக்கானது இந்நீதிமன்றத்தால் கடந்த 30.12.2024 தேதி கோப்பிற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. எதிரிகளுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டு எதிரிகள் இந்நீதிமன்றத்தில் ஆஜரானவுடன் 29.09.2025ம் தேதி குற்றவியல் நடைமுறை சட்டப் பிரிவு 207ன் கீழ் வழக்கு ஆவணங்களின் நகல் கட்டணமின்றி வழங்கப்பட்டது. இருதரப்பு வாதங்களையும் கேட்டு கடந்த 29.09.2025ம் தேதி 1ம் எதிரியின் மீது இந்திய தண்டனை சட்டம் பிரிவுகள் 294(b), 326, 506(ii) இதசவின் கீழும், 2, 3 எதிரிகளின் மீது இந்திய தண்டனை சட்டம் பிரிவுகள் 294(b), 326ன் கீழும் குற்றச்சாட்டுகள் வனைந்து, குற்றச்சாட்டின் சாராம்சங்கள் குறித்து எதிரிகளிடம் விளக்கி கேட்டபோது, 'எதிரிகள் பொய் வழக்கு என்றும், வழக்கு விசாரணை வேண்டுமென்றும்' கூறினார்கள். எனவே, இவ்வழக்கு சாட்சிகளின் விசாரணைக்காக உத்தரவிடப்பட்டுள்ளது.

3. இவ்வழக்கில் அரசு தரப்பில் அரசு தரப்பு சாட்சி.1 முதல் 4 சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டும், அரசு தரப்பு சான்றாவணம்.1 முதல் 7 குறியீடு செய்யப்பட்டது. பட்டியல் சாட்சிகள் 4 முதல் 10 வரையிலானவர்களை உதவி அரசு குற்றவியல் வழக்கறிஞர் நிலை–2 அவர்கள் அளித்த பரிந்துரையின் அடிப்படையில் விசாரிக்கப்படாமல் நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.



KAILAASH R
Digitally signed by KAILAASH R
Date: 2026.03.27 21:19:58 +0530

4. இவ்வழக்கில் கடந்த 26.03.2026ம் தேதி அரசு தரப்பு சாட்சியங்களில் எதிரிகளுக்கு பாதகமாக தோன்றும் சாட்சியம் குறித்து, அவற்றை கேள்விகளாக தொகுத்து குற்ற விசாரணை முறை சட்டம் 313(1)(b) பிரிவின் கீழ் வினவியபோது, அதனை மறுத்து எதிரிகள் 'பொய் சாட்சி, பொய் வழக்கு' என்றும், தங்களது தரப்பில் விசாரிக்க வாய்மொழி சாட்சி இல்லை என்றும் கூறினார்கள். எனவே, எதிரிகள் தரப்பில் சாட்சியம் முடிக்கப்பட்டது. இருதரப்பு சாட்சிய விசாரணைகள் முடிக்கப்பட்டதால் இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது.

5. அரசு தரப்பில் அரசு தரப்பு சாட்சி.4ன் சாட்சியத்தின் மூலமாகவும், குறியீடு செய்யப்பட்டுள்ள அரசு தரப்பு சான்றாவணம்.1 முதல் 7 ஆவணங்கள் வாயிலாகவும், அரசு தரப்பு வழக்கை எவ்வித சந்தேகத்திற்கும் இடமின்றி அரசு தரப்பில் நிரூபணம் செய்யப்பட்டுள்ளது என்றும், எனவே, எதிரிகளுக்கு அதிகபட்ச தண்டனை வழங்க வேண்டும் என்றும், அரசு தரப்பில் வாதிடப்பட்டது.

6. இவ்வழக்கின் புகார்தாரரான அ.சா.1, மற்றும் கண்ணுற்ற சாட்சிகளான அ.சா.2, அ.சா.3 ஆகியோர் பிறழ் சாட்சிகளாக மாறி அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கவில்லை என்றும், அரசு தரப்பு சாட்சி.4–ன் சாட்சியத்தை மட்டும் வைத்து எதிரிகள் குற்றவாளி என்று முடிவு செய்ய முடியாது என்றும், எனவே, எதிரிகள் மீதான குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் நிரூபணம் செய்யப்படவில்லை என்றும், சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு வழங்கி எதிரிகளை வழக்கில் இருந்து விடுதலை செய்து உத்தரவிட வேண்டுமாறு வாதிடப்பட்டது.

7. இவ்வழக்கில் தீர்மானிக்கபட வேண்டிய பிரச்சனைகள்

i) இவ்வழக்கில் எதிரிகள் மீதான இந்திய தண்டனை சட்டம் பிரிவுகள் 294(b), 326, 506(ii)ன் கீழான குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பில் எவ்வித சந்தேகத்திற்கும் இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? இல்லையா? என்பதேயாகும்.

**8.தீர்வு:–**

8.1) இவ்வழக்கில் எதிரிகள் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு அரசு தரப்பில் நிரூபிக்கப்பட்டுள்ளதா என அரசு தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்து பார்க்கும்போது, இவ்வழக்கின் புகார்தாரரான அரசு தரப்பு சாட்சி.1 தனது புகார் வாக்குமூலத்தில், 05.05.2023ம் தேதி இளையமதுகூடம் காளியம்மன்கோவில் காவடி கரகம் நிகழ்ச்சியில் கலந்து கொள்ள தான் சென்றிருந்தபோது மாலை 7.45 மணியளவில் தனது ஊரைச்சேர்ந்த ஆகாஷ் என்பவர் அலகு குத்தி காவடி எடுத்து வந்ததாகவும், அப்போது 1ம் எதிரி அவரது இருசக்கர வாகனத்தில் அங்கு அதிவேகமாக வந்ததாகதவும், தான் அது பற்றி



KAILAASH R
Digitally signed by KAILAASH R
Date: 2026.03.27 21:20:04 +0530

கேட்டதற்கு தன்னை தகாதவார்த்தைகளால் திட்டி, கட்டையை எடுத்து அடித்ததாகவும், 1ம் எதிரியின் நண்பர்களான 2 மற்றும் 3ம் எதிரிகள் அங்கு வந்து 1ம் எதிரிக்கு ஆதரவாக தன்னோடு சண்டை செய்து பிளாஸ்டிக் பைப்பாலும், கையாலும், காலாலும் மாறி மாறிதாக்கி கொலைமிரட்டல் விடுத்ததாக குறிப்பிட்டு புகார் வாக்குமூலம் கொடுத்துள்ளபோதிலும், தனது முதல் விசாரணையில் கடந்த 05.05.2023ம் தேதி 07.45 மணியளவில் தான் காளியம்மன்கோவிலுக்கு சென்று கொண்டிருந்தபோது அங்கு சிலர் கூட்டமாக சண்டையிட்டு கொண்டு இருந்ததாகவும், கூட்டத்தை வேடிக்கை பார்க்க அவர் அங்கு சென்றபோது யாரோ சிலர் தகாத வார்த்தைகளால் திட்டி அருகில் கிடந்த கட்டையால் அவரை தாக்கியதாகவும், அந்த நேரம் இருட்டு நேரம் என்பதால் யார் தாக்கினார்கள் என்பதை தான் பார்க்கவில்லை என்றும், எதிரிகளுக்கும் தனக்கும் ஏற்கனவே முன் விரோதம் இருந்ததால் எதிரிகள் தான் தாக்கியிருப்பார்கள் என நினைத்து மருத்துவமனையில் புகார் கொடுத்ததாகவும், அதில் உள்ள விபரம் தனக்கு எதுவும் தெரியாது என்றும், போலிசார் தன்னை விசாரிக்கவில்லை என்றும் சொல்லி அரசு தரப்புக்கு விரோதமாக சாட்சியமளித்து பிறழ் சாட்சியாகியுள்ளார். எனவே இவரது சாட்சியத்தின் மூலம் எதிரிகளை அரசு தரப்பு குற்றச்சாட்டின்படி குற்றவாளியாக கருத முடியாது என இந்நீதிமன்றம் கருதுகிறது.

8.2) இவ்வழக்கு கண்ணுற்ற சாட்சிகளான அ.சா.2, 3 ஆகியோர் தங்களது சாட்சியத்தில், இவ்வழக்கு சம்பந்தமாக தங்களுக்கு எதுவும் தெரியாது என்றும், போலிசார் தங்களை விசாரிக்கவில்லை என்றும் சொல்லி அரசு தரப்புக்கு விரோதமாக சாட்சியமளித்து பிறழ்சாட்சியாக மாறியுள்ளார்கள்.

8.3) இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரி சார்பாக சாட்சியம் அளித்த திருவெண்காடு காவல் நிலையத்தின் உதவி ஆய்வாளரான அரசு தரப்பு சாட்சி.4 தனது சாட்சியத்தில், சிறப்பு உதவி ஆய்வாளர் குருமூர்த்தி என்பவர் நிலைய பொறுப்பில் இருந்த போது சீர்காழி அரசு மருத்துவமனையில் இருந்து கிடைத்த தகவலை பெற்று, அங்கு சென்று புகார்தாரரிடம் வாக்குமூலம் பெற்றது பற்றியும், அதன் அடிப்படையில் எதிரிகள் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தது பற்றியும், சம்பவ இடத்திற்கு சென்று சாட்சிகள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தது பற்றியும், சாட்சிகளை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்தது பற்றியும், 1,2 எதிரிகளை கைது செய்து நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தது பற்றியும், அ.சா.1க்கு சிகிச்சை அளித்த மருத்துவரை விசாரணை செய்து காயச்சான்று பெற்றது பற்றியும், மருத்துவர் கொடுத்த காயச்சான்றின் அடிப்படையில் சட்டப்பிரிவு மாற்று அறிக்கை தயார்



KAILAASH R
Digitally signed by KAILAASH R
Date: 2026.03.27 21:20:11 +0530

செய்தது பற்றியும், இறுதியாக இவ்வழக்கின் புலன் விசாரணையை முடித்து எதிரிகள் மீது குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்தது பற்றி சாட்சியமளித்திருப்பினும், இவ்வழக்கின் புகார்தாரர் மற்றும் கண்ணுற்ற சாட்சிகள் ஆகியோர் அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவாக சாட்சியமளிக்காமல் பிறழ் சாட்சியாக மாறி சாட்சியம் அளித்துள்ள நிலையில், அரசு தரப்பு சாட்சி.4 ஆன காவல்துறை அதிகாரியின் சாட்சியத்தை மட்டும் வைத்து எதிரிகளின் குற்ற செயல் அரசு தரப்பில் நிரூபித்துள்ளதாக தீர்மானிக்க இயலாது என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

9. முடிவில் அரசு தரப்பில், முன்னிலைப்படுத்தப்பட்ட சாட்சிகளின் வாயிலாக 1ம் எதிரி மீது இந்திய தண்டனை சட்டம் பிரிவுகள் 294(b), 326, 506(ii)ன் கீழும், 2, 3 எதிரிகள் மீது இந்திய தண்டனை சட்டம் பிரிவுகள் 294(b), 326ன் கீழும் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்படவில்லை என முடிவு செய்து எதிரிகளை மேற்கண்ட பிரிவுகளின் கீழ் குற்றவாளிகள் இல்லை என குற்ற விசாரணை முறை சட்டம் 248(1) பிரிவின் படி எதிரியை விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

10. எதிரிகள் இந்நீதிமன்றத்திற்கு எழுதிக் கொடுத்த பிணை பத்திரங்கள் வழக்கின் மேல் முறையீட்டு காலத்திற்கு பின்பு தானாக இரத்தாக வேண்டும் என்று உத்தரவிடப்படுகிறது. இவ்வழக்கில் வழக்கு சொத்துக்கள் ஏதும் தாக்கல் செய்யப்படவில்லை என்பதால் அதுகுறித்து எவ்வித உத்தரவும் பிறப்பிக்கப்படவில்லை.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்த்து பிழைநீக்கம் செய்யப்பட்டு 2026ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 27 ஆம் நாள் ஆகிய இன்று திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

KAILAASH R

Digitally signed by KAILAASH R
Date: 2026.03.27 21:20:17 +0530

நீதித்துறை நடுவர்,
சீர்காழி.

1. அரசுத் தரப்பு சாட்சிகள்:

| | | |
|---|---|---|
| அரசு தரப்பு சாட்சி.1 | திரு.பிரவீன்குமார் | கண்ணுற்ற சாட்சி |
| அரசு தரப்பு சாட்சி.2 | திரு. சுந்தர்ராஜன் | கண்ணுற்ற சாட்சி |
| அரசு தரப்பு சாட்சி.3 | திரு. சுப்ரமணியன் | கண்ணுற்ற சாட்சி |
| அரசு தரப்பு சாட்சி.4 | திரு. ராமமூர்த்தி | காவல் உதவி ஆய்வாளர் |

2. அரசு தரப்பு சான்றாவணங்கள்:

| | | |
|---|---|---|
| அரசு தரப்பு சான்றாவணம்–1/ அரசு தரப்பு சாட்சி.1 | 07.05.2023 | புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து |
| அரசு தரப்பு சான்றாவணம்–2/ அரசு தரப்பு சாட்சி.4 | 07.05.2023 | புகார் வாக்குமூலம் |
| அரசு தரப்பு சான்றாவணம்–3/ அரசு தரப்பு சாட்சி.4 | 07.05.2023 | முதல் தகவல் அறிக்கை |
| அரசு தரப்பு சான்றாவணம்–4/ அரசு தரப்பு சாட்சி.4 | 07.05.2023 | பார்வை மகஜர் |
| அரசு தரப்பு சான்றாவணம்–5/ அரசு தரப்பு சாட்சி.4 | 07.05.2023 | மாதிரி வரைபடம் |
| அரசு தரப்பு சான்றாவணம்–6/ அரசு தரப்பு சாட்சி.4 | 07.05.2023 | காயச்சான்று |
| அரசு தரப்பு சான்றாவணம்–7/ அரசு தரப்பு சாட்சி.4 | 07.05.2023 | சட்டப்பிரிவு மாற்று அறிக்கை |

3. அரசு தரப்பு சான்று பொருட்கள்: இல்லை.

4. எதிரிகள் தரப்பு சாட்சிகள்: இல்லை.

5. எதிரிகள் தரப்பு சான்றாவணங்கள் மற்றும் சான்று பொருள்: இல்லை

KAILAASH R

Digitally signed by KAILAASH R
Date: 2026.03.27 21:20:24 +0530

நீதித்துறை நடுவர்,
சீர்காழி.

குறிப்பு

1.தீர்ப்பு பற்றிய தகவல் காவல்துறைக்கு தெரிவிக்கப்பட்டது.
2.இவ்வழக்கு விசாரணையின்போது எதிரிகள் நீதிமன்ற பிணையில் இருந்து வருகின்றார்.
3.இவ்வழக்கில் சாட்சிகள் 3 முறைக்கு மேல் விசாரணைக்காக இந்நீதிமன்றத்திற்கு அழைக்கப்படவில்லை.

நகல்

1)மாண்பமை தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர், மயிலாடுதுறை அவர்களுக்கு பணிந்து சமர்பிக்கப்படுகிறது.